பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 11 ஷவ்வா 13 இதழ் 227

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-9-77

## அக்டோபர் மாதம் முதல்

# யாழ். நகரில் அமுலுக்குவரும் புதிய விதிமுறைகள்!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் நகரில், போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினரின் இத்தீவிர நடவடிக்கைகள், அக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து வாகனபொறுப்பதிகாரி இதுசம்பந்தமாகவிடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒற்றை வழிப் பாதையை மீறுவோர், பக்கம் பக்கமாகத் துவிச்சக்கர வண்டிகளின்மீது பிரயாணம்செய்வோர், மற்றும் வாகனங்களுக்கு இடையூறளிக்கும்வகையிற் தமது வண்டிகளை நிட்பாட்டுவோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.

கடைச் சொந்தக்காரர்கள் தத்தம் கடைகளின் முன்பாகப் பீப்பாக்களையும், வேறுபொருள்களையும் வைத்து நடைபாதையைத்தடைசெய்யாமலிருக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

துவிச்சக்கர வண்டிகளின் சொந்தக்காரர்கள் தத்தம் துவிச்சக்கரவண்டிகளைப் பாது

(6-ம் பக்கம் பார்க்க)

# கடற்றொழில் அமைச்சர் காலமானார்!

(கொழும்பு)

**கடற்றொழில் அமைச்சர் எஸ். டி. எஸ். ஜெயசிங்கா (வயது 66) நேற்றுப் பிற்பகல் மாரடைப்பால் காலமானார்.**

தெஹிவளை - கல்கிசைத் தொகுதியின் தேசிய அரசு பேரவை உறுப்பினரான அமைச்சர் ஜெயசிங்கா 1952ம் ஆண்டு இத்தொகுதியின் எம். பி.யாக முதற்தடவையாகத் தெரிவுசெய்யப்பட்டார் இதன் பின்னர் 1956ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தோல்வி அடைந்த திரு. எஸ். டி. எஸ். ஜெயசிங்கா 1960ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார்.

1965ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் இவர் வெற்றிபெற்று, திரு. டட்லி சேனநாயக்காவின் தேசிய அரசாங்கத்தில் பிரதி தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தெஹிவளை-கல்கிசை மாநகரசபையின் முதல் மேயராகவும் இவர் கடமையாற்றினார்.

அரசியலில் பிரவேசிக்க முன்னர் திரு. ஜெயசிங்கா முக்கிய பஸ் கம்பெனி ஒன்றின் உரிமையாளராக விருந்தார்.

பௌத்த சமயத் தொண்டரும், பிரபல சமூகசேவையாளருமான இவர், சிறிது காலமாக சுகவீனமுற்றிருந்து நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் மாரடைப்பால் காலமானார்.

காலஞ்சென்ற அமைச்சரின் இரண்டு கண்களும் கண்தானச் சங்கத்துக்கு நேற்று அன்பளிப்பு செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து பூதவுடல், உக்குவளையிலுள்ள அவரது இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அன்பளிப்பு செய்யப்பட்ட கண்களில் ஒன்று நேற்றிரவு சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றையது இன்று கண்ணிழந்த ஒருவருக்குப் பொருத்தப்படுகிறது.

# லயன்ஸ் கழக உதவியுடன் புற்றுநோயாளர் சென்றனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அவசர புற்றுநோய் சிகிச்சை பெறவேண்டியவர்கள் சமீபத்திய கலவரம் காரணமாக மகாரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்குச் செல்வதற்கு தயங்கினர். இவர்களது அச்சத்தை நீக்கி அவர்களை மகரகம ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதில் லயன்ஸ் கிளப்பின் யாழ்ப்பாணக் கிளை வெற்றி பெற்றிருக்கிறது.

அவசரச் சிகிச்சை பெற வேண்டிய பன்னிரண்டு நோயாளர்களை நேற்று யாழ்ப்பாணம் ரயில்நிலையத்தில் லயன்ஸ் கழக உதவி மாவட்ட ஆளுநர் டாக்டர் யோகு பசுபதி, மற்றும் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த டாக்டர்கள் எஸ். சுப்பிரமணியம், என். சபாரத்தினம், சுந்தரலிங்கம், திருவாளர்கள் பா. சிவானந்தன், எஸ். செபஸ்தியாம்பிள்ளை, சி. மகேசன், எஸ். ஞானப்பிரகாசம், எஸ். அற்புதநாதன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

இந்த நோயாளரை கொழும்பில் லயன்ஸ் மாவட்ட ஆளுநர் திரு. ஒஸ்வின் சில்வா மற்றும் மிரிகான, மகரகம, பன்னிப்பிட்டி, நுகேகொடை ஆகிய இடங்களைச் சேர்ந்த லயன்ஸ் கழக உறுப்பினர்களும் தலைவர்களும் வரவேற்று உரிய வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

# அபின் கடத்தலில் கூட்டுறவு லொறி?

## விசாரணைகள் நடக்கின்றன

கொழும்பு, திங்கள்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான ஒரு லொறியில் அபின் கடத்தப்பட்டதா?

வடக்கிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த ப. நோ. கூ. சங்கத்துலொறியொன்று ஆனையிறவில் பாதுகாப்பு அதிகாரிகளினால் சோதனையிடப்பட்டபோது, வெங்காயம், செத்தல் மிளகாய்க்கு மத்தியிலே பெரும் தொகையான அபின் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ள, விசேஷ அதிகாரிகள் கோஷ்டி ஒன்று வடக்கே அனுப்பப்பட்டதில், ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான லொறிகள் இவ்விதமாக பல சந்தர்ப்பங்களில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பது தெரியவந்துள்ளதாம்.

இந்தக் கடத்தல்களிலும், தவறான முறையில் லொறிகளை பயன்படுத்துவதிலும் சில அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள பலநோக்குக்

(6-ம் பக்கம் பார்க்க)

## "இந்த ஆசிரியர்கள்

# இடமாற்றத்திற்கு விண்ணப்பியுங்கள்"

யாழ்ப்பாணம், செவ்

இம்மாதம் 30-ம் திகதிக்குப் பின்னரும், வேலைக்குப் போக விரும்பாத பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் யாவரும், இடமாற்றத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

இத்தகவலை, இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக் கிளை பொதுச் செயலாளர் திரு. த. தேவராசா தெரிவித்தார்.

இடமாற்ற விண்ணப்பத்தின் 3 பிரதிகளை சங்கத்தினூடாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விண்ணப்பங்கள் அக்டோபர் 2 ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஜும்மாபள்ளிவாசல் ஒழுங்கையில் 54-ம் இலக்க கட்டடத்தில் உள்ள சங்கக் கிளைக் காரியாலயத்தில் பாதிக்கப்பட்ட தமிழாசிரியர்கள் சென்று தமது கஷ்ட நஷ்டங்களைத் தெரிவிக்க வசதியாகச் செயலாளர் முழுநாளும் காரியாலயத்தில் கடமையாற்றி வருகிறார். (அ)

# மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம் திங்.

காங்கேசன்துறை சிறுவர் பூங்காவுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு நவரத்தினம் சுந்தரலிங்கம் என்பவர் இருநபர்களால் தாக்கப்பட்டார்.

மயக்கமடைந்த நிலையில் இவர் உடனடியாகத் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்று உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வாவுக்குப் புகார் செய்யப்பட்டது. பொலிஸார் இச்சம்பவம் பற்றி விசாரணை செய்து வருகின்றனர். [க-அ]

# வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். ரோட்டரிச் சங்கத்தினால் நடாத்தப்படும் வேலை வாய்ப்பு வழிகாட்டி நிலையம், நாட்டில் இடம்பெற்ற இனவாத நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற இருவருக்கு நேற்று வேலைவாய்ப்பு வழங்கியது.

திருநெல்வேலி சீமாசில்க் இன்டஸ்றீஸ் லிமிட்டட் நிறுவனத்தில் இவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு வழிகாட்டி நிலையத்தின் முயற்சியினால் வேறு ஐந்து பேருக்கும் சீமாசில்க் நிறுவனத்தில் நேற்று நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (கெ-அ)

# "நீதிபதிகளைப்போல் இளைஞர்கள் விளங்கவேண்டும்"

கொடிகாமம், திங்கள்

"தமிழ் இளைஞர்கள் இன்றையகாலகட்டத்தில் பொறுப்புணர்ச்சியுடையவர்களாக இருக்கவேண்டும். வருங்கால வாழ்க்கையின் அடிக்கல்லாக விளங்கும் இளைஞர்கள் மிகவும் சிந்தித்து நீதிபதிகளைப்போல் செயலாற்றவேண்டும்"

இவ்வாறு அளவெட்டி பிறைக்கைத்திடலில் திரு. க. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற மாட்டுவண்டிச்சவாரிப் போட்டிக்கு பிரதம விருந்தினராகவும் பரிசளிப்பாளராகவும் கலந்துகொண்ட அளவெட்டி விவசாயப் பெருக்கக்குழுத் தலைவர் பேசுகையில் கூறினர்.

"பொலிசாருக்கும் பொது மக்களுக்குமிடையில் நிலவிய பரஸ்பர நல்லெண்ண உறவு அண்மையில் நிலவிய அசம்பாவிதங்களினால் அறவேமுறிந்து விட்டது.

நாட்டில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த இளைஞர்கள் உழைக்கவேண்டும்" என்றார். (அ)

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், செவ்.

வன்செயலால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்த மாணவர்களுக்கு உதவுமுகமாக நல்லூர் மாணவர் பேரவையினரால் ஆரம்பிக்கப்பட்ட நிதியை தொழிலதிபரும், சைவத் தொண்டருமான திரு. எஸ். தியாகராசா தொடக்கி வைத்தார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பாடசாலை புத்தக, உபகரணங்களுக்கு உதவுவதுடன் அவர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இப்பணம் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிதியினைச் சேகரிப்பதற்காக நல்லூர் மாணவர் பேரவையின் நிர்வாக அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்றும் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ளது. (கா)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் அரிசி ஆலையும் அதன் உபகரணங்களும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7207

பரந்தன் முல்லைத்தீவு றோட்டில் 10 ஏக்கர் காணி கிணறுடன் விற்பனைக்குண்டு. மிளகாய் செய்கைக்கு சிறந்தது. விபரங்களுக்கு: தயாபரன் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, கிளிநொச்சி 7226

### தேவை

விவசாயம் செய்யக் கூடிய 50 பரப்புக்குட்பட காணி ஆவரங்கால், அச்சுவேலிப் பகுதியில் தேவை. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 7223. C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 7223

லேத் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ராதா மெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7167

# 30-ம் தேதிக்குமுன் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும்

## பாதிக்கப்பட்ட தமிழ் அரசு ஊழியர் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், செவ். ''பாதிக்கப்பட்ட சகல தமிழ் அரசாங்க ஊழியர்களும், தாங்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் செய்யக்கோரி இம்மாதம் 30ம் தேதிக்கு முன்னர், தங்கள் இலாகாவிற்கு விண்ணப்பம் செய்யவேண்டும்''

யாழ். றிம்மர் மண்டபத்தில் நேற்றுக்காலை நடந்த பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தின் பொதுச்சபை கூட்டத்தில் ஏகமனதாக மேற்கண்டவாறு முடிவுசெய்யப்பட்டது.

டாக்டர் சு. பாலசிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களும், பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர் மண்டபம் நிரம்பிவழிந்து வெளிவளவிலும் பெருந்திரளானோர் கூடிநின்றனர்.

இடமாற்ற விண்ணப்பத்தின் பிரதியொன்றைப் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வாரத்திற்குள் அரசு எடுக்கும் முடிவை அடுத்து அக்டோபர் 8ம் தேதி இதே மண்டபத்தில் நடக்கவிருக்கும் பொதுக்கூட்டத்தில், அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யப்படும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க. அ)

## வேலைக்குத் திரும்பியவர் காசையும் காதையும் இழந்தார்

யாழ்ப்பாணம், செவ். அனுராதபுரத்திற்குச் சென்று தமது கந்தோரில் சம்பளம் பெறச் சென்ற ஒரு தமிழ் ஊழியர், சக ஊழியர் ஒருவரால் தாக்கப்பட்டு, சம்பளத்தையும் பறிகொடுத்தார்.

இம்மாதம் 19ம் தேதி சம்பளம் பெறச் சென்ற இவர், சம்பளம் பெற்றுக்கொண்டு திரும்பும்போது, அனுராதபுரம் பஜாரில் சக ஊழியர் அவரிடம் கத்தி முனையில் சம்பளபணத்தைஅபகரித்ததுடன் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

காது துண்டாக்கப்பட்ட நிலையில், இவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குச் சென்ற சமயம், அங்குள்ள 'பெல்பொட்டம்' அணிந்த ஒரு டாக்டர் இவருக்குச் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டாராம்.

இவர் உடனடியாக யாழ்ப்பாணம் வந்து தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 17ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். றிம்மர் மண்டபத்தில் நடந்த தமிழ் அரசாங்க ஊழியர் கூட்டத்தில் டாக்டர் க. பாலசிங்கம், மேற்கூறிய சம்பவத்தைத் தெரிவித்தார். [க. அ]

## வேலைக்குத்திரும்பியமற்றொருவருக்கு தெமட்டக் கொடையில் அனுபவம்

யாழ்ப்பாணம், செவ்வாய் தெமட்டக்கொடையிலுள்ள 'சிலிப்பிங் பங்களாவில் மீண்டும் வேலைக்குச் சென்ற தமிழ் ஊழியர் ஒருவர் நள்ளிரவில் கத்திமுனையில்பயமுறுத்தப்பட்டதால் திரும்பிவந்துவிட்டார்.

தமிழ்ஊழியரான எம். சிவரத்தினம் இதுபற்றித் தமது இலாகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 18-ம் திகதி அரசின் வேண்டுகோளின்படி நான்வேலைக்குத்திரும்பினேன். 19-ந் திகதி பகலும், இரவும் வேலை செய்தேன். அன்றிரவு 1-30 மணியளவில் நான் படுத்திருந்த அறைக்கதவைத் தட்டி 'சிவரத்தினம் ஐயா' என்று அழைத்தார்கள். அங்குள்ள பையன் என நினைத்துக் கதவைத் திறந்தேன். மூன்று பேர் கத்தியைக்காட்டிச்சத்தம் போடக்கூடாதென எச்சரித்தனர் நான் சத்தம் போடவில்லை. ''யாழ்ப்பாணத் தமிழர் இங்கேதங்கக்கூடாது; தங்கினால் கொலை செய்வோம் என்று கூறினார்கள் அந்தஇடத்தில் இரு தமிழ் ஊழியர் மட்டும்தான் இருந்தோம். நான் அவர்களுக்கு 'சரி' என்று கூறினேன். மறுநாள் காலை நான் உயிரைப் பாதுகாக்கவேண்டுமென்பதால் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். நான் புகையிரதப்பகுதியில் 31 வருடமாகக் கடமையாற்றுகிறேன். தற்போதுள்ள நிலையில் என்னைக் காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.''

இக்கடிதத்தின் பிரதி நேற்று யாழ். றிம்மர் மண்டபத்தில் நடந்த தமிழ் அரச ஊழியரின் கூட்டத்தில் தலைவரினால் வாசித்துக்காட்டப்பட்டது.

டாக்கா, செப் 26 பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வாந்திபேதி நோயால் இதுவரை 451 பேர் இறந்துள்ளதாக டாக்கா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

டாக்காவில் 28 பேரும், பரிசால் என்ற இடத்தில் 10 பேரும் பலியாகியுள்ளனர்.

ஏனைய பகுதிகளில் நிலைமை சீரடைந்துவருகிறது என்று கூறப்பட்டது. [உ]

## அண்டவெளி மண்டல ஆராய்ச்சி: ரஷ்ய - அமெரிக்க ஒத்துழைப்பு

மாஸ்கோ, செப். 26 அட்லாண்டிக் மாகடலில், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சேர்ந்து ஜோடியாக அண்ட வெளி மண்டல ஆராய்ச்சிக்கான ராக்கெட்டுகளைச் செலுத்தியதன் மூலம் இந்தத்துறை ஆராய்ச்சி ஒத்துழைப்பில் இரு நாடுகளின் நிபுணர்களும் ஒருபுதிய கட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளனர்.

அவர்கள் நடத்திய சோதனைகள் வெற்றிகரமாக முடிவடைந்திருக்கின்றன. வல்லோப்ஸ் தீவில் உள்ள அமெரிக்க விண்வெளிக் கேந்திரத்திலிருந்தும், ''அகடெமிக் கொரோலியோன்'' என்ற சோவியத் ஆராய்ச்சிக் கப்பலிலிருந்தும் ராக்கெட்டுகள் ஒரே சமயத்தில் எய்யப்பட்டன. வாயு மண்டல மேற்பரப்பு ஆராய்ச்சியின் நோக்கம் என செய்தி அறிக்கைகள் மேலும் தெரிவித்தன. (உ)

## நாயின் வாயில் சிசுவின் சடலம்

காலி, திங்கள் அடர்ந்த காடு ஒன்றிற்குள் இருந்து சிசுவின் சடலம் ஒன்றை நாய் ஒன்று கௌவிவந்து தின்று கொண்டிருந்ததாம்.

களனியில் இச்சம்பவம் நடந்தது. இச்சிசுவின் தொடர்பாக காலி பொலிசார் மகாகொட குடியேற்றப்பகுதியைச் சேர்ந்த அலிஸ்நோனா என்ற பெண்ணைவிசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (உ)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/13777

1 செல்வராயன் செல்லப்பாவும் பெண்
2. நீலாம்பிகையும் இருவரும் வட்டுக்கோட்டை மேற்கு.

வழக்காளிகள்

எதிராக

யோசேப் பாக்கர் மாணிக்கசிங்கம்
இல. 8 கென்சிங்ரன் காடின், கொழும்பு

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ம் திகதி (1977-11-14) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு, ரூபா 3122/-வும் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 8 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1973-ம் ஆண்டு சித்திரை மாதம் 23ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 480/99 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை ''உழுத்தொல்லை'' நிலப்பரப்பு நாலே முக்காலும் (4 3/4) கல்வீடும், குசினியும், கிணறும், செய்பயிர், வான் பயிர்களும், எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை குமரகுருவின் உரித்தாளருக்கும், இராசகாரியர் நாகலிங்கத்தின் உரிமைக்காரருக்குமுரிய காணிகள் வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு றோட்டு, இதடங்கலும் பதிவு E 371/90.

சி. ஆ. த. வடிவேலு, J. P.
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில். 7221

# கண்ணால் கண்டவற்றை கமிஷனுக்கு துணிவுடன் கூறுங்கள்

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு டாக்டர் பாலசிங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ் ''பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தாங்கள் கண்ணால் கண்டவற்றைக் கமிஷன் முன் துணிவுடன் சொல்லமுன்வராவிட்டால் கமிஷனால் எவ்வித பயனும் ஏற்படாது.

யாழ் றிம்மர் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர் கூட்டத்தில் பேசிய டாக்டர் க.பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் பாலசிங்கம் மேலும் கூறியதாவது; அனுராதபுரத்தில் 16 பேர் முன்னிலையில் ஒரு கொலை நடந்திருக்கிறது.

16 பேரும் அக்கொலைச் சம்பவத்தைப்பற்றி தகவல் தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து சட்டத்தரணி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் சம்பவம் பற்றி விசாரணைசெய்ய தமிழ் பொலிசார் ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

ஆனால் சம்பவத்தைக் கண்ட எவரும் தேவையான சாட்சியத்தை சொல்ல மறுத்திருக்கிறார்கள் கண்ணால் கண்டதை சொல்ல முன்வரவில்லை.

இப்படியானால் எந்தக் கமிஷன் வந்தும் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

சம்பவத்தை கண்டவர்கள் பயமின்றி நடந்தவற்றை சொல்ல முன்வரவேண்டும்' அது தமிழ் சமுதாயத்திற்கு செய்யும் தொண்டாகும். (க)

## வைத்தியசாலையும் வாசிகசாலையும்

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் கிராமசபை ஆயுள்வேதவைத்தியசாலையும், கிராமசபை வாசிகசாலையும் ஒரே கட்டிடத்தில் ஒன்றாக இயங்குவதால் நோயாளர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். வைத்தியரிடம் நோயாளிகள் தங்கள் நோய்களை விபரமாக எடுத்துக்கூற முடியாதிருக்கின்றதாம்.

வைத்திய பரிசோதனைக்குரிய இடம் பின்னர் ஏதோ ஓர் ஏற்பாட்டின்படி மறைக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டு வைத்தியசாலையும் வாசிகசாலையும் ஒன்றாக்கப்பட்டுள்ளன. (அ)

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(பதிவு இல. 984)

### யாழ். மாவட்டக்கிளை (வ. மா. ஆ. ச.)

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் மீண்டும் பாடசாலைக்கு செல்லாது இடமாற்றம் பெறவிரும்பின் இடமாற்ற விண்ணப்பப்பிரதி மூன்றுடனும் கல்வியமைச்சின் செயலாளருக்கு விபரமான கடிதத்துடனும் 2-10-77க்கு முன் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

த. தேவராசா,
பொதுச் செயலாளர்.

54, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
1977-09-25. 7225

## கருவி பழுது

பண்டத்தரிப்பு, திங்கள் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையிலுள்ள படம் பிடிக்கும் ''எக்ஸ்றே'' கருவி கடந்த ஒரு மாத காலமாக பழுதடைந்துள்ளது. இதனால் இங்கு வைத்திய பரிசோதனை செய்துகொள்ளமுடியாமல் பல நோயாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இக்கருவியைத் திருத்தித் தருமாறு கொழும்பிலுள்ள சுகாதாரப் பகுதியினரிடம் அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையாம். (அ)

# "பலஸ்தீன ராஜ்யத்தில் ஜோர்தான் மன்னருக்கு இடமில்லை"

## வி. இ. தலைவர் அரபாத் அறிவிப்பு

லண்டன், செப். 26

புதிய பலஸ்தீன ராஜ்யம் உருவாகும் பட்சத்தில் அதில் ஜோர்தான் மன்னர் ஹுசெய்னுக்கு அனுமதி அளிப்பது அசாத்தியம் என்று பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்திருக்கிறார்.

மன்னர் ஹுசெய்ன் ஒரு பலஸ்தீனியர் அல்ல என்பதே இதற்குக் காரணமென்கிறார் அரபாத்.

இதேவேளை மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பான ஜெனீவா மாநாடு கூட்டப்படுவது தொடர்பான அமெரிக்க திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டுள்ளது என்று வெளியான செய்திபற்றி கருத்து வெளியிட அமெரிக்க வெளிநாட்டமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டதாக ஜெருசலேம் செய்திகள் தெரிவித்திருந்தன.

இஸ்ரேல், எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது எனத் தெரிகிறது.

### தயான் அறிவிப்பு

தெற்கு லெபனனில் இஸ்ரேல் தலையிடுவதை நிறுத்த வேண்டும் என்று இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷே தயான் அறிவித்துள்ளார்.

இம்மோதலில் 7 பேர் மாண்டதாகவும் 27 பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

# பிரெஞ்சு மந்திரிசபையில் மாறுதல் ஏற்படும்?

பாரிஸ், செப். 26

பிரெஞ்சு மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பிரெஞ்சு மந்திரி சபையில் விநியோகத்துறை பொறுப்பை வகிப்பவர் செனட் சபைக்கு போட்டியிடும்பொருட்டு ராஜினாமா செய்துள்ளதால் இப்பதவி வெற்றிடமாகியுள்ளது.

9வருடங்களாக இவர் செனட்டர் பதவி வகிக்க வேண்டி வரும்.

இதேவேளை வேறு மூன்று மந்திரிகளும் செனட்சபைக்கும் போட்டியிட முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. (உ)

# சி. ஐ. ஏ. சிவில்உரிமைகளை மீறியுள்ளது

## எட்வர்ட் கென்னடி தாக்கு

வாஷிங்டன், செப்.26

"அமெரிக்க மக்களின் சிவில் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமாகிய சி ஐ.ஏ.மிக மோசமான முறையில் மீறியுள்ளது. மிக அபாயகரமான பரிசோதனைகளுக்காக சி.ஐ.ஏ. அமெரிக்கப் பிரஜைகளை அவர்களுக்கு தெரியாமலும், அவர்களின் உடன்பாடில்லாமலும் பயன்படுத்தி வந்துள்ளது" என பொதுச் சுகாதாரம் பற்றிய விசேஷ செனட் உப கமிட்டியின் தலைவர் செனட்டர் எட்வர்ட் கென்னடி கூறியுள்ளார்.

"மனித நடத்தையை 'மாற்றியமைப்பது' தொடர்பாக சில 'உள் இரகஸியங்களை' கண்டறியும் பொருட்டு உயிரியல்-இரசாயன முறை

(5-ம் பக்கம்பார்க்க)

# செய்மதி: ரஷ்யா அனுப்பியது

மாஸ்கோ, செப். 26

"எகாறன்" என்ற தொலைச் செய்திப் பதிவு செய்மதியை சோவியத் யூனியன் அண்ட வெளிக்குச் செலுத்தியது.

செய்மதிகளைப் பயன்படுத்தி தொலைச் செய்திப் பதிவு அமைப்புகளை மேலும் செம்மைப் படுத்தும் திட்டத்துக்கு அமையவே மேற்படி செய்மதியைச் சோவியத்யூனியன் அனுப்பி வைத்துள்ளது.

சைபீரியாவிலும், தூரவடக்கிலுமுள்ள நிலையங்களும் தஸம அலை வரிசையில் கறுப்பு-வெள்ளை, வர்ண ஒலி, ஒளி அலைகளை பரப்புவதற்கான அஞ்சற் சாதனங்கள் "எகாறன்" செய்மதியில் பொருத்தப்பட்டுள்ளன. "எகாறன்" 23 மணி 45 நிமிடங்களுக்கு ஒரு தடவை பூமியைச் சுற்றி வருகின்றது. (உ)

# "தென்கொரியாவுக்கு யு. எஸ்.ஆயுதஉதவி: புதிய நெருக்கடியை தோற்றுவிக்கும்"

## யு. எஸ். செனட்டர் மக்கவர்ன் கருத்து

வாஷிங்டன், செப்.26

"தென் கொரியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கிவருவது கொரிய தீபகற்பத்தில் மேலும் புதிய நெருக்கடிகள் உருவாகவே வழிவகுக்கும்" என பிரபல அமெரிக்க அரசியல் தலைவரும், செனட்டருமான ஜோர்ஜ் மக்கவர்ன் அமெரிக்க, ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

"அடுத்த ஐந்தாண்டுகாலத்துக்கு தென்கொரியாவுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிக்கென மேலதிகமாக 18 கோடி டாலர்களை ஒதுக்குமாறு அமெரிக்க அரசு காங்கிரஸை வற்புறுத்தி வருகின்றது. 90 "எஃப்-16" போர் விமானங்கள் உட்பட மேலும் 250 'ஜெட்' போர் விமானங்களைக் கொரியாவுக்கு வழங்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது" என செனட்டர் மக்கவர்ன் மேலும் பேசுகையில் கூறினர். (உ)

# பதட்ட நிலைமை?

சிங்கப்பூர், செப். 26

பிலிப்பைன்ஸின் தெற்குப் பிரதேசங்களில் மீண்டும் பதட்ட நிலைமை உருவாகியிருப்பதாக மணிலாவிலிருந்துவரும் செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பஸிலியன் தீவிலுள்ள மோரோ தேசிய விடுதலை முன்னணிப் படைகளுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் இராணுவ யூனிட்டுகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனவாம்.

மோரோ தேசிய விடுதலை முன்னணி பிலிப்பைன்ஸில் தெற்குப் பிரதேசத்திலுள்ள 13 மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிவருகின்றது. (உ)

அமெரிக்காவில்

# இந்தியப் பெண்களுக்கு இன்னல்?

ஜெனீவா, செப் 26

அமெரிக்க இந்தியப் பெண்கள் பலாத்காரமாக மலடுகளாக்கும் திட்டமொன்றினை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்திவருகின்றது. அமெரிக்க இந்தியர்களின் எண்ணிக்கை நாளடைவில் குறைக்கும் நோக்குடன் அமெரிக்க அரசு செயல்படுத்தி வரும் திட்டம் எமது மக்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்துகின்றது. அமெரிக்க இந்திய மக்களின் கலாச்சார மரபுகளை அழிக்க அமெரிக்க அரசு முயல்கின்றது.

அமெரிக்க இந்தியர்களின் பிரச்னைகள் பற்றி இங்குநடைபெறும்சர்வதேச மகாநாடொன்றில் கலந்துகொள்ள வந்துள்ள அமெரிக்க இந்திய இயக்கத்தலைவர்களில் ஒருவரான நஸல் மீன்ஸ் பத்திரிகையாளருக்களித்தபேட்டியொன்றின்போது மேற்கண்டவாறு கூறினர்.

"அமெரிக்க இந்தியர்களைப் பொறுத்தளவில் அமெரிக்க அரசு இனஒழிப்பு, இனப்பாகுபாட்டுக் கொள்கையொன்றினையே பின்பற்றுகின்றது. அமெரிக்க இந்தியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக அது மனிதாபிமானமற்ற சில முறைகளைக் கையாளுகின்றது. புதிதாகப் பிறக்கும் அமெரிக்க இந்தியக் குழந்தை ஒவ்வொன்றும் அதனது குடும்பத்திடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வேற்று இனத்தவர்களின் குடும்பங்களில் வளர்க்கப்படுகின்றன" என்று அவர் மேலும் சொன்னர். (உ)

# மாமல்லபுர சிறப்புயர மத்திய அரசு உதவும்

சென்னை, செப். 26

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாமல்லபுரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதில் மத்திய அரசு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதலிடத்தை அளிக்கும் என்று மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. பி. கௌசிக் அறிவித்தார்.

தற்போது தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் மதுரையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (உ)

தமிழக

# ஊராட்சிமன்றத் தேர்தல்கள் ஜனவரியில் நடைபெறக் கூடும்

## அமைச்சர் காளிமுத்து தகவல்

சென்னை, செப். 26

தமிழ்நாட்டில் நகரசபைத் தேர்தல்கள் ஜனவரி மாதத்தில் நடைபெறக்கூடும் என்று தமிழ்நாடு ஊராட்சித்துறை அமைச்சர் திரு. காளிமுத்து அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 10-ந் திகதி நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டில் இதுபற்றி முடிவு செய்யப்படுமென்றும் அமைச்சர் சொன்னர்.

மதுரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார். (உ)

# ஜப்பானின்இராணுவ ஆற்றல் அமெரிக்கா உதவும்

## ஜாப். பாதுகாப்பு செயலாளர்

டோக்கியோ, செப்.26

"ஜப்பானின் இராணுவ ஆற்றலை அதிகரிக்க அமெரிக்கா உதவுவதாக உறுதிமொழி அளித்துள்ளது" என ஜப்பானிய தேசிய பாதுகாப்புத் துறைத் தலைவர் அஸாவோ மிஹாரு இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஹறோல்ட் பிறவுடனும் 10 நாள் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடாத்தி டோக்கியோ மீண்ட தருணத்திலேயே மிஹாரு மேற்படி பத்திரிகையாளர் மகாநாட்டினை நடாத்தினர்.

"ஜப்பானிய-அமெரிக்க ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்துவதில் அமெரிக்கா பெரும் ஆர்வம் காட்டுகிறது. தனது இராணுவ வலுவினை அதிகரிப்பதற்கு ஜப்பான் மேற்கொண்டுவரும் முயற்சிகளை அமெரிக்கா நன்கு புரிந்து கொண்டுள்ளது" என மிஹாரு தமது பேட்டியின் போது கூறினர். (உ)

றொடீஷிய இராணுவ அட்டகாசம்:

# "ஐ.நா. சபையில் சர்வதேச ஆதரவுதிரட்ட முயல்வேன்"

## ஸாம்பிய வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

லுஸாக்கா, செப். 26

ஸாம்பிய-றொடீஷிய எல்லைப்புறப் பிரதேசங்களிலுள்ள அப்பாவி சிவிலியன் மக்களை றொடீஷிய இராணுவம் தாக்கி வருவது பற்றி தாம் ஐ. நாவில் முறையீடு செய்யவுள்ளதாக ஸாம்பியா வெளிநாட்டமைச்சர் வித்தேகே முவாலே கூறினர்.

"நமிபிய ஸிம்பாப்பே மக்களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் ஸாம்பியா, பொட்ஸ்வானு, மொஸாம்பிக் முதலான எல்லைப்புற நாடுகள் மீது ஸிமித்தின் ஆட்சி முறை கேடான தாக்குதலைத் தொடுத்து வருகின்றது. ஐ. நா. சபையில் தென் ஆபிரிக்க இனவாத ஆட்சிக்கு எதிராக மக்கள் ஆற்றி வரும் போராட்டத்துக்கு சர்வ ஆதரவினைத் திரட்டுவதற்கு நான் முயலுவேன்" என அமைச்சர் முவாலே மேலும் கூறினர். (உ)

# அமெரிக்க பொருளாதாரம் அடுத்த ஆண்டில் உயரும்

## நிதியமைச்சர் அறிவிப்பு

வாஷிங்டன், செப். 26

அமெரிக்காவின் பொருளாதாரம் அடுத்த ஆண்டில் 5 சத விகிதத்தால் வளர்ச்சியடையும் என்று அமெரிக்க நிதியமைச்சர் திரு. மைக் ளுமென்டால் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, "அமெரிக்கப் பொருளாதாரம் முனைப்பான நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ளது. 1974-75 காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கத்தினது விளைவுகளிலிருந்து இன்றும் அமெரிக்கப் பொருளாதாரம் மீளவில்லை" என நியூயார்க்கிலிருந்து வெளியாகும் பிஸ்னஸ் வீக் சஞ்சிகை எழுதியுள்ளது.

"அமெரிக்க பொருளாதாரத்தில் பணவீக்கம் அபாயகரமான மட்டத்துக்கு ஏறியுள்ளது. உருக்கு, மோட்டார் வாகனங்கள், கடதாசி ஆகியவற்றின் உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. 30 முக்கிய கம்பனிகளின் லாபத்தில் பெரும் வீழ்க்காடு ஏற்பட்டுள்ளது" என பிஸ்னஸ் வீக் மேலும் எழுதியுள்ளது. (உ)

# பாதிக்கப்பட்ட தமிழ் வர்த்தகர்கள் இனிச்செய்யவேண்டியதென்ன?

— சோ. வன்னியசிங்கம் —

[இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டுத் தமது உடைமைகளை எல்லாம் இழந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு திரும்பியுள்ள வர்த்தகர்கள் எதிர்காலத்தில் எவ்வித நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதை கட்டுரையாளர் இங்கே விபரமாகத் தருகின்றார்.]

இன்று தமிழின வர்த்தகர்கள் நூற்றுக்கணக்கானோர் தென்னிலங்கையில் தமது உடைமைகளையும் வர்த்தக நிலையங்களையும் கைவிட்டு உயிரைப் பாதுகாக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் வடபால் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களின் எதிர்கால வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும்? அவர்கள் எத்தொழில் ஈடுபடவேண்டும் என்பன அவர்களின் தனிப்பட்ட தீர்மானமும் பிரயத்தனமுமாகவே இருக்கவேண்டும் என்று விட்டுவிடமுடியாது.

இதுவரைகாலமும் அந்நிய இடத்தில் அந்நிய சமுதாய மத்தியில் வெற்றிகரமாகப் போட்டியிட்டு சாதாரணமாகச் சிறு அளவில் தொடங்கிப் பெரும் நிலையை அடைந்தவர்களாகிய இவர்களிடையே தொழில்முனைவுத் திறமை Entreprenevrial Talent கணிசமாக இருக்கின்றதென்பது வெளிப்படை. அவர்களுடைய திறமைதான் அந்நியர் சூழலில் போட்டியிட்டு வெற்றிகாணச் செய்தது. அத்தகைய திறமை படைத்தோர் தமது திறமையைத் தொடர்ந்து பிரயோகித்தல் சமுதாய முன்னேற்றத்திற்கு அத்தியாவசியம். அவர்களை வழிநடாத்திவிடுவதில் சமுதாயம் அக்கறை காட்டவேண்டும்.

அரசாங்கசேவை நிர்ப்பந்தத்தினிமித்தம் அந்நிய இடங்களில் வாசஞ்செய்யவேண்டிய நிலைமையில் இனவிரோதத் தாக்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு இனவிரோதக் கிளர்ச்சிகள் மட்டும்தான் வருங்காலத்தில் இடரைக் கொண்டு வரும். ஆனால் வர்த்தகர்களுக்கு அத்தகைய இனவிரோதக் கிளர்ச்சிமட்டுமன்று; போட்டி வர்த்தகர்களின் பொறாமையும் இனவிரோத உணர்ச்சிக்குத் தூபம்போடும் என்பது கூறாமலே தெளிவாகும். ஆகவே தென்னிலங்கையில் தமிழ் வர்த்தகர்கள் தொழிலாற்ற முடியுமென்பது ஆபத்தான விடயம். பலபிரிவினருக்குக் கப்பம் கட்டிக்கொண்டு வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்பது புத்தியீனம்; கப்பம் கேட்போரின் எண்ணிக்கை வானளாவ வளர்ந்துவிடும்.

## தொழிலை மாற்றவேண்டும்

ஆயினும் வர்த்தகர்கள் வடக்கு கிழக்கில் தமது பழைய தொழிலாகிய வியாபாரத்தைப் பயன்தரும் வகையில் செய்யமுடியாது. ஏற்கனவே இப்பகுதிகளில் ஏராளமான வர்த்தக நிலையங்கள் இயங்குகின்றன. இத்தகைய சூழலில் இவர்கள் தமது தொழிலிடங்களை மட்டுமன்றி தொழிலையே மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் தமது திறமையைப் புதிய துறைக்குத் திசைதிருப்பம் செய்ய வேண்டும்.

வரலாறு ஒரு உண்மையை எடுத்துணர்த்துகிறது. பல நாடுகளிலும் உற்பத்தித்துறையில் வெற்றிபெற்று அத்துறையைக் கட்டியெழுப்பியவர்கள் அதற்கு முன்னர் வியாபாரத் துறையில் திறமையாக இயங்கியவர்களே.

பிரிட்டனில் கைத்தொழில் புரட்சி ஏற்பட முன்னர் நாட்டிடை வர்த்தகத்தில் பிரிட்டிஷ் மக்கள் முன்னணிக்கு வந்தனர். அவர்கள்தான் பின்னர் பிரிட்டனின் கைத்தொழில் துறையை வளர்த்து பிரிட்டனை கைத்தொழில் உலகின் சிகரத்திற்குக் கொண்டு வந்தனர்.

தொழில் முனைவுத் திறமை அடிப்படையானது. அது எத்திசையில் உபயோகிக்கப்படுகிறதென்பது சூழலில் தங்கியிருக்கிறது ஏன் இலங்கையிலேயே புடவை வியாபாரத்திலும் வேறு எத்தனையோ ரகமான வியாபாரங்களிலும் ஈடுபட்டிருந்தவர்கள் அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டினிமித்தம் இறக்குமதி தடைபட்டதும், பல்வேறு துறைகளில் உற்பத்தியாளராகச் சிறப்படைந்திருக்கின்றனர்.

## தீவிரகதியில் மாற்றங்கள்

எந்தநாட்டின் பொருளாதாரத்திலும் இன்று தீவிர கெதியில் மாற்றங்கள் Dyna-mic Changes ஏற்படுகிறது. அத்தகைய மாற்றங்கள்தான் வளர்ச்சிக்கு வித்தாகும். ஆகவே சூழலுக்கேற்றவாறு தமிழ் வர்த்தகர்களும் தத்தம் தொழிலைத் திசைதிருப்பம் செய்யவேண்டும். வியாபாரத் துறையை விட்டு உற்பத்தித் துறைக்கு இறங்கவேண்டும்.

ஆனால் தமிழ் வர்த்தகர்கள் பெருமளவு வியாபார நிலையங்களை நடாத்தவில்லை, ஆகையால் தம் சொந்த பலத்தால் உற்பத்தித்துறையில் பெருமளவில் ஈடுபடுவது காலதாமதத்திற்கு உள்ளாகும், ஆனால் அவர்கள் கூட்டாக இயங்கினால் இலகுவில் வெற்றிபெற முடியும். சிறு அளவு உற்பத்தியாளரை ஊக்குவிக்கவும் அவர்கட்கு உதவி செய்யவும் சமுதாயம், கைத்தொழிற்பட்டை என்ற ஒரு நவீன அமைப்பை சமீப காலத்தில் வகுத்திருக்கிறது.

அநேக நாடுகளில் கைத்தொழிற்பேட்டைகள் மிக வெற்றிகரமாகச் செயல்படுகின்றன. இலங்கையிலும் எக்கல கைத்தொழிற்பேட்டையை நாம் அறிவோம். வேறும் சில கைத்தொழிற்பேட்டைகள் உண்டு யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியிலும் ஒரு கைத்தொழிற்பேட்டை உருவாக்கப்படுகிறது.

கைத்தொழிற்பேட்டை நிறுவுவதன் தத்துவ அடிப்படையைப் பின்வருமாறு கூறலாம். கைதொழில் நிறுவனம் ஒன்று ஸ்தாபிப்பதற்கு பின்னணி வசதிகள் பலதேவைப்படும். மின்சார வசதி ஜல சப்ளை. போக்குவரத்து வசதி கட்டிடவசதி நெடுஞ்சாலைகள் போன்றன இன்றியமையாதன. இவற்றை ஆங்கிலத்தில் Infra Structure என்பர். தமிழில் பூர்வாங்க அமைப்புக்கள் அல்லது வாய்ப்புக்கள் எனலாம். சிறு அலவில் கைத்தொழில் நடாத்த முன்வருவோருக்கு இத்தகைய பூர்வாங்க அமைப்புச் செலவு பெரும் சுமையாகும். எனவே அவற்றை சமுதாய ரீதியில் அதாவது அரசாங்கமே வகை செய்து கொடுப்பதே கைத்தொழிற்பேட்டையின் தத்துவமாகும்.

இடம் பெயர்ந்த வர்த்தகர்கள் உற்பத்தித்துறையில் ஈடுபடுவதற்கு தமக்கு ஒன்றிரண்டு கைத்தொழிற் பேட்டையை அமைத்துத்தருமாறு கோரவேண்டும் அரசியல்வாதிகள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கைக்குப் பூரண ஆதரவு கொடுத்து அரசாங்கத்தை அத்தகைய உதவி செய்யுமாறு வற்புறுத்த வேண்டும்.

## வெளிநாட்டு உதவி

இத்தகைய புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு பிறநாட்டு உதவி கோருவது மிகவும் பொருத்தமாகும். ஏனெனில் பிறநாடுகள் தாம் கொடுக்கும் உதவி புனர்வாழ்வு செய்வதற்கோ பொருளாதாரத்தை வளர்ப்பதற்கோ பயன் பட வேண்டும் என்பதே அவர்கள் சித்தாந்தம். தருமம் செய்வது பிறநாட்டுதவியின் தத்துவம் அன்று. ஒருவரைத்தமது சொந்தக்காலால் எழுந்து நடமாடவைப்பதே அவர்கள் உதவித்திட்டத்தின் தத்துவம்.

வடமாகணத்தில் எத்தகைய கைத்தொழில் செய்யலாம் என்று விலைவக்கூடும், போதிய வாய்ப்புண்டு. ஒரு சிலவற்றையே உதாரணமாக கூறலாம்.

முந்திரிகை பயிர்ச் செய்கை யாழ்ப்பாணத்தில் பெருமளவு பலிதமாகிவிட்டது. மேலும் வளருவதற்கு போதிய வாய்ப்புண்டு. இதிலிருந்து 'உவைன்' செய்வது ஒரு சிறந்த கைத்தொழிலாகும் வேறும் எத்தனையோ பழவகைகளைப் பதம் செய்து ஏற்றுமதி செய்ய முடியும். கடற்றொழிலில் பெரும் வாய்ப்புக்கள் உண்டு. பாத அணி செய்வது ஒரு விரிந்து கொண்டுபோகும் துறை. அநேக வீட்டுத் தேவைக்கான உலோகப் பொருட்கள் செய்வதுலாபகரமானது பல இன மருந்துத் தயாரிப்புகள் இலகுவாகச் செய்யலாம். காகிதப் பொருட்கள் வேறும் ஒரு வாய்ப்புள்ளதுறை.

எனவே இவ்வர்தகர்கள் ஒரு சங்கம் ஒன்றைத் ஸ்தாபித்து அதன்மூலம் கூட்டாக நடவடிக்கை எடுக்கவும் கைத்தொழில் பேட்டைக் கோரிக்கை முன்வைத்து அரசாங்கத்தை வற்புறுத்தவும் பிறநாட்டுதவி கோரவும் தொழில் நுட்ப சேவைகளைப்பெறவும் நடவடிக்கை எடுத்தல் மிகவும் யதார்த்த ரீதியானது.

---

# "அன்பும் அறமும்நிலைபெற புராணங்கள் உதவுகின்றன"

யாழ்ப்பாணம், செவ்

உயரப்புலம் உத்தாங்க விநாயகர் ஆலய பரிபாலசபை ஆலய மண்டபத்தில் தினமும் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தவும் பண்ணிசை வகுப்பு நடத்தவும் ஏற்பாடுகள் செய்துள்ளது.

சிவநெறிப் புரவலர் க.கனகராசா தலைமையில் திரு. கே. எஸ். குலரத்தினம் இதனை ஆரம்பித்துவைத்துப் பேசும் போது 'சமய அறிவு, அநுட்டானம், ஆசாரம் என்பன மனிதனின் உள்ளக்தைத் தூய்மைப்படுத்துவன. இவற்றை மக்கள் பெறுவதற்கு புராணவிரிவுரை கேட்டலும் பண்களை உரியமுறைப்படி ஓதுதலும் அவற்றின் பொளை அறிதலும் கேட்டனுபவித்தலும் வேண்டும்'' என்றார்.

உரையாசிரியர் திரு. வி. நல்லையா பெரிய புராண விரிவுரையை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது 'துன்பம் நீங்கவும் அன்பும் அறமும் நிலை பெறச் செய்யவும் பொறுமை சாந்தம் நிலை பெறவும் புராணங்கள் நல்வழியைக் காட்டுகின்றன'' என்று கூறினார். (சா-அ)

## நேரடி விசாரணை

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்றதாகக் கூறப்படும் அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக யாழ் மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் அத்தியட்சகர் டாக்டர் எஸ். பத்மநாதன் இருதினங்களாக மேற்படி வைத்தியசாலைக்கு நேரடியாகச்சென்று விசாரணை நடத்தினர்.

இந்த வைத்தியசாலையில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி பூரணமான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் மாதகல் கிராம முன்னேற்றச் சங்கம் சுகாதார சேவை அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்திருந்தது. (அ)

## உதயசங்கர் காலமானார்

புதுடில்லி, செப். 26

பிரபல இந்திய நடனக் கலைஞர் திரு. உதயசங்கர் இன்று காலமானார்.

நோய் காரணமாக இவர் கல்கத்தாவிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருக்கு வயது 77. (உ)

## இயக்குநராக ஊழியர்

கொழும்பு, திங்கள்

இலங்கை ரயர் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் முதல் தடவையாக இயக்குநர் பதவிக்கு சாதாரணதர ஊழியரான திரு. வெஸ்லி அமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்

கொக்குவில்மேற்கு சனசமூக நிலயத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: சி.பொ. வேலாயுதபிள்ளை, செயலாளர்: சோ. சிவலோகநாதன், உப தலைவர்கள்: கா. பாலசுப்பிரமணியம், த. கணேசபிள்ளை, பொருளாளர்: செ. கிருபாகரன், உப பொருளாளர்வேவிக்னராஜா பொறுப்பாளர்: ஆ. ரங்கராஜன் உபபொறுப்பாளர்: இ. இராஜலிங்கம் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்: வே: தளையசிங்கம், கணக்காய்வாளர்: ஆ. இராமச்சந்திரன்.

எழுவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவாகியது. (கெ-உ)

0 0 0

மாவிட்டபுரம், திங்கள்

அளவெட்டி வடக்கு சனசமூகநிலைய வருடாந்தப்பொதுக் கூட்டம் திரு. வி. கே. செல்லத்துரை தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சமயம் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. வி. கே. செல்லத்துரை, தலைவர்: திரு. அ. சிவராசா, உபதலைவர்: திரு. எஸ். பொன்னுத்துரை, பொதுச்செயலாளர்: திரு. என். ஆர். குணசேகரன், உபசெயலாளர்: திரு. எஸ். கணேசமூர்த்தி, தனாதிகாரி: திரு. நா. பாலகிருஷ்ணன்.

நிர்வாகசபையும், விளையாட்டுப் பொறுப்பாளர்களும் தெரிவாகினர்.




## 27—9—77 செவ்வாய்

(செய்திகள்: காலை 6 30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-05 சைவ நற்சிந்தனை பி. வி. நாராயணசாஸ்திரிகள், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 திருமுறைப் பாடல்கள் எம். வர்ணகுலசிங்கம், 7-35 பாட்டு ஆர். சோமநாதன், 8-05 வாத்தியவிருந்து.

மாலை 6-20 வாத்திய இசை, 6-30 பாட்டு விமலாதேவி பொன்னுத்துரை, 7-00 கமமும் புலமும், 7-20 விவசாயிகள் பரச்சினை, 7-35 விளையாட்டுத்துறைச் செய்திகள், 7-45 த்மிழ்மூலம் சிங்களம், 8-05 குறுங்கதை, 8 10 இஸ்லாமிய கீதம், 8-25 மருதமலர், 9-30 உரைச் சித்திரம் - நம்பிக்கை 10-00 பாட்டு (இசைத்தட்டு) நா. சச்சிதானந்தம், 10 30 உங்கள் விருப்பம் - திரைப் படப் பாடல்கள். (கெ)

## மருந்துக்கலவை பயிற்சி வகுப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்து கலவையாளர்களுக்கான வருடாந்தப்பயிற்சி வகுப்புக்கள் எதிர் வரும் அக்டோபர் மாதம் ஆரம்பமாகவிருக்கிறது.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்திய சாலை ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புகளுக்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் மேற்கொண்டுள்ளார். (அ)

## 'அமிர்' ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

இலங்கை பத்திரிகைப் பேரவைக்கு தமிழர் எவரும் நியமிக்கப்படாதது குறித்து எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் ஆட்சேபனை தெரிவித்து தகவல் ஒலிபரப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த அரசின் காலத்தில் தமிழர் ஒருவர்இப் பேரவைக்கு நியமனம் பெற்றதன் மூலம் தமிழ் பேசும் வாசகர்களினதும், பத்திரிகைகளினதும் முறைப்பாடுகள் குறித்து வேண்டிய விசாரணைகளை மேற்கொள்ள வாய்ப்பாக இருந்திருக்கிறது என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் தமிழ்பேசும் உறுப்பினர் ஒருவரை நியமித்து குறையை நிவர்த்தி செய்யும் படியும் அவர் கேட்டுள்ளார். (ம)

நாகம்ம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி.ப.4-30, 7-00
FIVE
GRAZY BOYS

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ ராஜம்மா
ஃ நாகேஷ் ஃ எம்.ஆர்.ராதா
ஃ கல்யாணகுமார் ஃ உதயகுமார் நடித்த
தாயின் கருணை

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p.m.
One Man, one Woman a Blitzkrieg of Emotion,
Between them a Flame is Kindled that Spendidly Ignites a Passion, Way beyond the limits of their imagination.
BRIEF ENCOUNTER Now a Major Film!
Starring
Sophia Loren — Richard Burton in
BRIEF ENCOUNTER (Color)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO
(Jaffna)
2nd WEEK
LAST FEW DAYS DON'T MISS IT
Daily 10-30, 4-45, 7-00 p.m. only
Robert Shaw - Robert Ryan in
CUSTER OF THE WEST

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி10-30, 2-30 மாலை6-00
விஜயகுமார் - ஜெயசித்ரா
தாய் இல்லாக் குழந்தை

கடைசி வாரம்
போன்: 7693
(யாழ் நகர்
தினசரி 10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7180
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ-நாகேஷ்
நடித்த
பூவா தலையா
(புதிய பிரதி)

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-00, மாலை 5-00,
சனி, ஞாயிறு 10-00, 1-00, 4-00, 6-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, 6-00
தேவரின்
பெண் தெய்வம்


# அரசின் அறிவிப்பை ஏற்க எழுதுவினைஞர்கள் மறுப்பு!

யாழ்ப்பாணம், செவ்வாய்

"அரசாங்க ஊழியர்கள் சேவைக்குச் செல்ல முடியாமல் இருப்பின் ஒவ்வொருவரும் தனியாக லீவு கோரி விண்ணப்பிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் அறிவித்தலை அரசாங்க தமிழ் எழுதுவினைஞர்கள் நிராகரிப்பதென தாம் கூட்டிய கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

இக் கூட்டம், யாழ்ப்பாண செயலகத்திற்கு முன்னால் உள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்க கட்டடத்தில் யாழ் மாவட்ட சங்கத்தலைவர் திரு க. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம் நிறைவேற்றியனுப்பிய தீர்மானங்களுக்கு சாதமான பதிலை அரசாங்கம் அனுப்பிவைக்கும்வரை சேவைக்கு திரும்புவதுமில்லை, லீவு கோரி விண்ணப்பிப்பதுமில்லை யென்ற மற்றொரு தீர்மானமும் நிறைவேறியது.

பாதிக்கப்பட்ட அரச தமிழ் ஊழியர் கழகப் பிரதிநிதியாது திரு எஸ். புவநேசன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறியதாவது: "எமது கழகம் 1956, 1958 கலவரங்களின் போது கூடிக்கலைந்த இயக்கங்கள் போலல்லாது ஒரு நிரந்தர இயக்கமாக இயங்கவுள்ளது.

"கழகத்திடம் பல திட்டங்களுண்டு. பல அபிவிருத்தி திட்டங்கள் இறுகைத்தொழில்கள் ஆரம்பிப்பது போன்ற திட்டங்களை வகுத்து வருகின்றன. அரச தமிழ் ஊழியரின் தற்போதைய பிரச்னைகளைத் தீர்த்துவைத்தபின்பு நிரந்தர தீர்வு காணக்கூடிய பிரச்னைகளை அணுகி தொடர்ந்தும் சேவை செய்ய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இதே நேரத்தில் எமது இயக்கத்தை ஊடுருவல்மூலம் மாசுபடுத்துவதற்குச் சில சக்திகள் முனையக்கூடும். எனவே ஒவ்வொரு அங்கத்தவர்களும் விழிப்பாக இருந்து கழகத்தின் நல்ல திட்டங்களை வெற்றிபெறச் செய்தல் அவசியம் என்றார்.

இக்கூட்டத்தில் புகையிரதப் பகுதி பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்க தலைவர் திரு. எஸ். ஆறுமுகமும் உரையாற்றினார். (கெ-உ

### போதைப்பொருள் தடுப்புப் பிரிவு

# இலங்கையில் நடைபெறும் சர்வதேச மாநாடு

## 17 நாடுகள் கலந்துகொள்கின்றன

கொழும்பு, திங்கள்

போதைப் பொருள் தடுப்பு நிலைய சட்ட அமுலாக்கத் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெற விருக்கிறது.

தூரகிழக்கு நாடுகளைச் சேர்ந்த இந்நிலையங்களின் சட்ட அமுலாக்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் இம் மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது என்று கொழும்புபோதை வஸ்து தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும், துப்பறியும் பொலிஸ் அதிபருமான திரு ஆர் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பாரதம், பங்களாதேஷ் உட்பட 17 நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொள்ளும். அபின் முதலான போதை வஸ்துக்கள் ஆகிய நாடுகளில் இருந்தே கூடுதலாக மேற்கத்தைய நாடுகளுக்கு கடத்தல் படுவதால் இலங்கையிப் நடைபெறும் இம்மாநாடு மிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது. (உ)

# 'திருமதி காந்தி தவறுகளை உணர்பவராக தெரியவில்லை'

புதுடில்லி, செப், 26

"திருமதி இந்திராகாந்தி தமது வழிகளை மாற்றிக்கொள்ளக்கூடியவராகவோ தமது கடந்தகாலத் தவறுகளை உணர்ந்துகொள்பவராகவோ தெரியவில்லை" என்று பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

தமிழ்நாடு, கேரள மாநில விஜயங்களை முடித்துக் கொண்டு பிரதமர் இன்று புது

(6 ம்பக்கம் பார்க்க)

# விவசாயிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்.

நெல் பயிரிடும் விவசாயிகள் கடந்த போகத்தில் நஷ்டமுற்றிருந்தால் அதற்கான காரணத்தை விவசாயப் பகுதியினருடன் கலந்தாலோசிக்குமாறு ஊர்காவற்றுறைப்பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவக்கொழுந்து வேண்டுகோள் விடுத்துள்ளார்

தற்போது மிளகாய் விதை நெல், அடிக்கட்டுப்பசளை போன்றவற்றை இலகுவில் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இவை தேவையானோர் விவசாய விரிவாக்க நிலையத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனறும் அவா கூறினார்.

இம்மாத நடுப்பகுதியில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் 100க்கு மேற்பட்ட விவசாயிகள் பங்குபற்றினர் என்றும் இங்கு அளிக்கப்பட்ட ஆலோசனைகளின் பலனை இவர்கள் மிளகாய், வெங்காயத்தில் நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கெ-உ)

# சி. ஐ. ஏ. ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கையாண்டு மனிதர்கள் மீது சி.ஐ.ஏ. கடந்த பல வருடங்களாக நடாத்தி வந்த பயங்கர பரிசோதனைகள் பற்றிய தகவல்களைத் தற்போது அறிந்துள்ள அமெரிக்க மக்கள் தற்போது பெரும் ஆத்திரமடைந்துள்ளனர்" என செனட்டர் கென்னடி மேலும் கூறினார். (உ)

# பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொது மக்களிடமிருந்து இதுவரை ரூபா 56909-89 சதம் கிடைத்துள்ளது. இந் நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ் கிளை கணக்கு இல. 3840-க்கு நேராக செலுத்தலாம். அல்லது பொருளாளர்களான யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு லங்கா நேசையா அல்லது சீமாஸ் இன்டஸ்றீஸ் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோரிடம் வழங்கலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி | 53608-39 |
| யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் | 1000-00 |
| புத்தூர் மக்கள் வங்கி ஊழியர்கள் | 315-00 |
| நாவாந்துறை றோ. க த க. பா. ஆசிரியர்கள் | 100 00 |
| சண்டிலிப்பாய் இ. ம. வி ஆசிரியர்கள் | 76-00 |
| நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வி. ஆசிரியர்கள் | 108.00 |
| கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா ம. வி, ஆசிரியர்கள் | 150-00 |
| கச்சாய் அ. த க. பா ஆசிரியர்கள் | 120-00 |
| மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர்கள் | 230-00 |
| மயிலணி சைவ வித்தியாசாலை ஆசிரியர்கள் | 100-00 |
| உடுவில் கலவத்தை றோ, க. த. க பா. ஆசிரியர்கள் | 35-00 |
| வேலணை தெற்கு ஐயனார் வி. ஆசிரியர்கள் | 25-00 |
| கந்தரோடை அருணோதயா த. வி. ஆசிரியர்கள் | 80-00 |
| சென். ஜேக்ஸ் றோ க. த. க. பா. ஆசிரியர்கள் | 100-00 |
| தருமபுரம் இல. 2 பாடசாலை ஆசிரியர்கள் | 110-00 |
| கோண்டாவில் பரஞ்சோதி வி. ஆசிரியர்கள் | 15-00 |
| வட்டு கார்த்திகேய வித்தியாலய ஆசிரியர்கள் | 20-00 |
| தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்கள் | 200-00 |
| தட்டாதெரு இ. த க. வித்தியாலய ஆசிரியர்கள் | 50-00 |
| குளமங்கால் றோ. க. த. க. வி ஆசிரியர்கள் | 25-00 |
| அல்லைப்பிட்டி பராசக்தி வி. ஆசிரியர்கள் | 25-00 |
| ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வி. ஆசிரியர்கள் | 50-00 |
| யாழ். வைத்தீஸ்வரன் வித்தியாலய ஆசிரியர்கள் | 337-00 |
| பிரணவன். ஆனைக்கோட்டை | 30-00 |
| | 56,909-89 |

### மணிவாக்கு

சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தை விட பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் மிக ஆபத்தானது.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு
The Eelanaadu

## விசாரணை

சமீபத்திய வன்முறைச் சம்பவங்கள்பற்றி விசாரணை செய்வதற்கு ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் திரு. எம். சி. சன்சோனியைக் கொண்ட தனிநபர் விசாரணைக் கமிஷன் நியமிப்பதென்ற அரசின் தீர்மானத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமீபத்திய இனக்கலவரம் பற்றி விசாரணை செய்வதற்கு பாரபட்சமற்ற விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படுமென்று பிரதமர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

1958-ம் ஆண்டில் நடந்த இனக்கலவரம்பற்றி விசாரணை செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அதுபற்றி விசாரணை செய்யப்படவில்லை.

அப்போதே ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து கலகத்துக்கான காரணங்களை ஆராய்ந்திருந்தால் மீண்டும் இப்போது ஒரு கலகம் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம்.

1958-ம் ஆண்டில் இனக்கலவரம் தோன்றுவதற்கான அறிகுறிகள் தோன்றியபோதே அப்போது ஆட்சிமன்றத்தில்உறுப்பினராக இருந்த திரு. வி. சுந்தரலிங்கம் எடுத்துக்காட்டியிருந்தார். ஆனாலும் அது பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை.

இப்போது நியமிக்கப்படும் விசாரணைக்கமிஷன் இனியும் இதுபோன்றஇனக்கலவரங்கள் தலையெடுக்காத வகையில் யோசனைகளைத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

1974-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மநாட்டின் இறுதியில் நடந்த துயரச் சம்பவம்பற்றி விசாரணைசெய்வதற்கு ஒரு பகிரங்க விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமல்ல இன்று ஆளும்கட்சியாக இருக்கின்ற ஐக்கியதேசியக் கட்சியும் கேட்டிருந்தது.

அப்போதே இந்த விசாரணைக்கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தால் பல பிரச்னைகள் தலைகாட்டியிருக்கமாட்டா.

சமீபத்திய இனக்கலவரம் பற்றி மட்டுமல்லாமல் தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் பதவியேற்றதும் நாட்டின் பல பகுதிகளிலும்ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பற்றியும் விசாரணை செய்தால்தான் சமீபத்திய கலவரங்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணங்களைக் கண்டுகொள்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

# யாழ். வளாக சம்பவங்கள்: ஆசிரிய சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நாட்டில் இடம்பெற்ற இனவாத சம்பவங்களின் போது யாழ்ப்பாண வளாகத்தில் நடைபெற்றதாகச் சந்தேகிக்கப்படும் சம்பவங்கள் குறித்து வளாக ஆசிரியர் சங்கம் வெளியீட்டுள்ள அறிக்கையொன்றில் வளாகம் பற்றி எழுந்துள்ள வதந்திகளை மறுத்துள்ளதுடன் உண்மை நிலை என்ன என்பதையும் விபரமாகத் தெரிவித்துள்ளது.

யாழ். வளாக ஆசிரியர் சங்கச் செயலாளர் டாக்டர் சண்முகதாஸ் இதுசம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"ஆகஸ்ட் 16-ந் திகதி பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே யாழ்ப்பாண நகரத்தில் கைகலப்பு ஏற்பட்ட காலந்தொடக்கம் வளாக அதிகாரிகள், வளாகத்திலுள்ளோர் யாவரையும் பாதுகாப்பதற்கு எடுத்த ஏற்ற நடவடிக்கைகள் பற்றி ஆசிரிய சங்கம் திருப்தியடைகின்றது அன்று காலை 9-30 தொடக்கம் வளாக வாயிற் கதவுகள் மூடப்பட்டு, மாணவர்கள் எல்லோரும் வளாகத்தினுள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள். ஆகஸ்ட் 16 ந் திகதி காலை தொடக்கம் ஆகஸ்ட் 17-ந் திகதி மாலை 4-20 மணி வரை திருநெல்வேலி வளாகத்துள் திரண்டிருந்தோருள் ஏறக்குறைய 300 சிங்கள மாணவர்களும், விரிவுரையாளர்களும், ஏனைய ஊழியர்களும் இருந்தனர். வளாக சமூகத்தின் சிங்கள அங்கத்தினர்கள் ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி மாலை 4-20 மணிக்கு பஸ்வண்டிகள் மூலம் தகுந்த பாதுகாப்புடன் அநுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இக்காலக்கட்டத்தில் வளாக அதிகாரிகள், ஆசிரியர்கள், தமிழ் சிங்கள மாணவர்கள் வளாகத்தினுள்ளே தங்கியிருந்தவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கும் உணவு வழங்குவதற்குமாக மிகுந்த கஷ்டங்களுடன் உழைத்தனர். யாழ்ப்பாண நகரத்தில் நடைபெற்ற சம்பவங்களாலும், நாட்டின் பிறபகுதி வன்செயல்கள் பற்றிய வதந்திகளாலும் வளாகத்தின் வெளியே பதட்டநிலை உருவாக பல தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் தமக்கேற்படக்கூடிய ஆபத்தின் மத்தியிலும் வளாக சிங்கள சமூகத்தினருக்குப் பாதுகாப்பளிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

"கலவரங்கள் நடைபெற்ற முதல்நாளன்று வளாக பதில் தலைவர் மனிதப் பண்பியற் பீடத் தலைவரையும் மாணவ ஆலோசகரையும் (இவர் ஆசிரியர்சங்கச் செயலாளருமாவார்) வளாகத்தைப்பாதுகாக்க உதவி வேண்டும்படி அரசாங்க அதிபரைச் சந்திக்கும்படி அனுப்பிவைத்தார். அவர்கள் அரசாங்க அதிபர், பொலிஸ் மா அதிபர், இராணுவத்தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் கலந்தாலோசித்ததன் பயனாக ஆகஸ்ட் 16-ந் திகதி தொடக்கம் அடுத்த நாள் சிங்கள மாணவர் வளாகத்தைவிட்டுச் சென்றது வரை திருநெல்வேலி வளாகப் பகுதிகளில் இராணுவப் பிரிவொன்று நிலைநிறுத்தப்பட்டது. வட்டுக்கோட்டை வளாகப் பகுதியில் இராணுவப்படை ரோந்து செய்தது. வட்டுக்கோட்டை வளாகப்பகுதி மாணவர்களுக்கு யாழ்ப்பாண நகரத்திலும் வேறுபாகங்களிலும் நடைபெற்ற சம்பவங்கள் பற்றித் தெரியாது. அங்கு மாணவர்களை வீடுகளுக்குக் கொண்டு செல்லப் பஸ் வண்டிகள் போகும்வரையும் வழக்கம் போல் விரிவுரைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இந் நெருக்கடி காலக்கட்டத்தில் வளாகத்தின் பதில் தலைவர் மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும் மதிநுட்பத்துடனும் நிலைமையை அணுகிய தன்மையை ஆசிரிய சங்கம் பாராட்டுகின்றது

"திருநெல்வேலி வளாகப் பகுதியினுள்ளோ வட்டுக்கோட்டை வளாகப் பகுதியினுள்ளோ நடந்த சம்பவத்தின்போதும் எந்தவொரு சிங்கள மாணவரும் தாக்குதலுக்கோ உடற்காயத்துக்கோ உட்படவில்லையென்பதை ஆசிரிய சங்கம் திருப்தியுடன் வெளியிடுகின்றது.

"வளாகம் வழமைபோல் நடைபெறுவதை ஆசிரியர் சங்கம் ஆவலுடன் எதிர்பார்ப்பது மட்டுமன்றி வளாக அதிகாரிகள் இதனைச் சாதிப்பதற்குத் தனது முழு ஆதரவினையும் நல்குகின்றது." (கெ)

# 'புதிய கிளைகள் திறக்கப்படவேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்.

500 கூப்பன்களுக்கு அதிகமாக ஒரு கூட்டுறவுச் சங்கக் கிளை வைத்திருக்கக்கூடாது என்று அரசு அறிவித்துள்ளதால் கூட்டுறவுச்சங்கங்களுக்கு மேற்கொண்டும் பலபுதிய கிளைகளைத் திறப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்று இலங்கைக் கூட்டுறவு ஊழியர் சம்மேளன வடபிராந்தியம் கோரியுள்ளது.

கூட்டுறவு இலாகாவும், கூட்டுறவுச் சபையும், கூட்டுறவுச் சங்க நிர்வாகங்களும், கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களும், பாவனையாளர்களுக்கு கிளைகளில் இருந்து பங்கீட்டுப் புத்தகங்களை மாற்றுவதனுல் ஏற்படக்கூடிய தாக்கங்களை அரசுக்கு எடுத்துக்கூறி பாவனையாளர்களை பாதிக்கா வண்ணம் தாம் கடமை செய்வோம் என்று உறுதிகூறி பாவனையாளரினதும், நுகர்வோரினதும் பேராதரவைத் திரட்டுவதென்று வடபிராந்தியக்கிளையினுல் தீர்மானிக்கப்பட்டது.

சம்மேளனம் மேற்கொண்ட தீர்மானங்களை நிறைவேற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு தூதுக்குழுவொன்றுமூலம் அனுப்பவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (கெ)

## வடபகுதி சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி அரசாங்க ஊழியர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுஸ்தாபனம் யாழ். மாநகர சபையை 3-2 கோல்களால் தோற்கடித்து இவ்வருட உதைபந்தாட்டச் சம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

சீமெந்துக் கூட்டுஸ்தாபன கோஷ்டியில் திருவாளர்கள் என். வடிவேஸ்வரன், ரி. அன்ரன், ஏ. யோச் தலா ஒரு கோல்களும், மாநகரசபைக் கோஷ்டியில் திருவாளர்கள் அ. இராஸையா, மணி தலா ஒவ்வொரு கோலும் போட்டனர். இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் திரு. கனகரட்டினம் மத்தியஸ்தத்தில் இடம் பெற்றது. (கெ)

## மனனப்போட்டி

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் எதிர்வரும் நவராத்திரி தின விழாவையொட்டி குமரகுரு சுவாமிகள் அருளிச்செய்த சகலகலாவல்லிமாலை மனனப் போட்டியொன்றை நடாத்தவுள்ளனர் மனனப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பல பரிசுகள் வழங்கப்படவுள்ளன. போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறும். நவராத்திரிவிழாவின் போது பரிசுகள் வழங்கப்படும். (அ)

## அக்டோபர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு நிலையங்களில் வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். அவ்விதமின்றிப் பொதுவிடங்களிற் காணப்படும் வண்டிகள் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதுடன் உரிமையாளருக்கெதிராக வழக்கும் தொடரப்படும்.

ஆட்கள் நடக்கும் நடைபாதையை தடைசெய்யாது துவிச்சக்கரவண்டிகளை அப்புறப்படுத்துமாறும், கூட்டம் கூட்டமாக பேசிக்கொண்டு இருக்காமலும் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

வீதிகளில் சாமான்களை வைத்துவிற்பனை செய்யாதும், பஸ் தரிப்பு இடங்களைத் தடை செய்யாமலும் இருக்கும்படியும் விற்பனை ஆட்களையும் பொதுமக்களையும் வேண்டிக் கொள்ளுகிறேன்

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் யாவும் அடுத்த மாதம் முதலாம்திகதியிலிருந்து அமுல் செய்யப்படும். இந்த விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## திருமதி காந்தி—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டில்லி திரும்பினர்.

வழியில் ஹைதராபாத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. தேசாய் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். பிரதமருடன் மத்திய எரிபொருள் மந்திரி திரு. எஸ். இராமச்சந்திரனும் சென்றிருந்தார்.

புதுடில்லி திரும்பியதும் பிரதமர் தமது முதல்வேலையாக ஜனுதிபதியைச் சந்தித்து அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார்.

## அபின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்து இப்பொழுது ஆராய்ந்து வரும் அதிகாரிகள் தங்கள் அறிக்கையை அடுத்த மாதம் கூட்டுறவு அமைச்சரிடம் கையளிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

## நாடும் நடப்பும்

சமீபத்தில் வெளிவந்த 'ஆனந்தவிகடன்' தலையங்கத்தை நமது வாசக அன்பர்களுக்காக இங்கு தருகிறேன்.

கருணாநிதி போட்ட கணக்கு!

ஜனநாயகத்தில் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து பொறுப்புடன் இயங்கி ஒன்றோடு ஒன்றாக ஒத்துழைக்கும் போதுதான் மக்களாட்சி பொருள் உள்ளதாகிறது.

ஒத்துழைப்பு என்றால் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் எப்போதும் ஒத்துப்போக வேண்டும் என்பது பொருளல்ல. ஆளும்கட்சியின் கொள்கைகளையெல்லாம் ஆதரித்து அதன் செய்கைகளையெல்லாம் பாராட்டிக் கொண்டிருந்தால் எதிர்க்கட்சி பொறுப்புடன் செயல்படுவதாகக் கூறமுடியாது. ஆதரிக்கவேண்டியதை மனமார ஆதரித்து எதிர்க்க வேண்டியதை உறுதியாக எதிர்த்து நிற்கும்போதுதான் எதிர்க்கட்சிதன் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதாகக்கூற முடியும்.

தங்கள் நிலையை எடுத்துக் கூறவும். வலிமையை வலியுறுத்தவும் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக்கொள்வது எதிர்க்கட்சியின் உரிமையாகும்.

எதிர்க்கட்சியின் இந்தப் பிறப்புரிமையைக் கலைஞர் கருணாநிதி அண்மையில் நிலைநிறுத்திக் காட்டியிருக்கிறார் இலங்கைவாழ் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் பொருட்டு கடந்தவாரம் அமைதியான முறையில் பேரணியொன்றும் கடையடைப்பும் நடத்தினர் அவர். அதன் மூலம் மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் நாட்டு மக்களின் உணர்ச்சியை எடுத்துக்காட்டியதோடு சட்டமன்றத் தேர்தலின் போது சென்னைநகரில் தி. மு. க. பெற்ற ஆதரவு மங்காமல் மறையாமல் அப்படியே இருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்தினர்.

அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவான இந்தக் கண்டனக் குரலை தி.மு.க. தனதாக்கிக்கொண்டுவிடுவதை ஆளும் கட்சி எப்படி ஆதரிக்கும்? எனவேதான், இந்தப் பேரணியையும் கடையடைப்பையும் கைவிடும்படி சட்டமன்றத்தில் நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் மன்றுடிக் கேட்டுக் கொண்டார்.

ஆனல் அனைவருக்கும்பொதுவானபிரச்னையானதால் ஆளும் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டாலும் பொதுமக்களின்பேராதரவுடன் பேரணி வெற்றியடைந்தே தீரும் என்று கலைஞர் சரியான கணக்குப் போட்டார். அதை எதிர்த்ததன் மூலம் மனோகரன் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார் பாவம்!

இதை ஆளும்கட்சி மனமார ஆதரித்திருக்கமுடியாதுதான், ஆனல்வாயளவிலாவது எதிர்க்காமல் இருந்திருக்கலாமே இந்தச்சூழ்நிலையில் எதிர்ப்பு வலுவற்றுப்போகும். 'அடையாள கண்டனம்' பெரும் வெற்றியடையும் என்று உணரும் சாமர்த்தியம் இருக்கவேண்டாமா?

0 0 0

சென்னைநகர மேயராகப் பதவிவகித்த திரு. மைனர் மோசஸின் சகோதரர் யாழ்ப்பாணத்துக்குவந்து சில தினங்கள் தங்கியபின் நேற்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

- ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.